بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 14/07/2023 அன்று U.K. - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

## பத்ர் யுத்தத்தின் நிலைமைகள் மற்றும் நிகழ்வுகள்

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾

اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

பத்ர் போர் தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய வாழ்க்கை சம்பவங்கள் மற்றும் நிகழ்வுகள் பற்றி எடுத்துக் கூறப்பட்டு வந்தது. பத்ர் போர் முடிவுற்றது. காஃபிர்களை அவர்களின் தீய முடிவு வரை அல்லாஹ் கொண்டு சேர்த்தான். 70 காஃபிர்கள் கொல்லப்பட்டனர். அதில் பல தலைவர்களும் இருந்தனர்.

அந்த **குரைஷிய தலைவர்களை அடக்கம் செய்தது தொடர்பாக இவ்வாறு குறிப்பு காணப்படுகின்றது.** சஹீஹ் புகாரியின் அறிவிப்பாகும்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கஅபாவில் தொழுது கொண்டிருந்தார்கள். சஜ்தாவின் நிலையில் இருக்கும்போது மக்கத்து காஃபிர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய இரு தோள்களுக்கு இடையில் விலங்கின் கருப்பையைத் தூக்கி வைத்து விட்டார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் ஸஜ்தாவின் நிலையிலேயே இருந்தார்கள்; அந்த காஃபிர்களோ சிரித்துக் கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களுக்கு யாரோ ஒருவர் இதைக் கூறினார். ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்கள் வந்து பெருமானார் (ஸல்) அவர்களின் மீது இருந்த அந்த எடைமிக்க கருப்பையை அகற்றினார்கள். அப்பொழுது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொழுது முடித்தார்கள். அச்சந்தர்ப்பத்தில் பெருமானார் (ஸல்) அவர்கள் துஆ செய்தார்கள்: “அல்லாஹ்வே நீ குறைஷை பிடிப்பாயாக! அல்லாஹ்வே நீ குறைஷை பிடிப்பாயாக! அல்லாஹ்வே நீ குறைஷை பிடிப்பாயாக!” பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் ஒவ்வொரு பெயராக எடுத்துக் கூறி அவர்களைப் பிடிப்பாயாக என்று துஆ செய்தார்கள். “அல்லாஹ்வே! அம்ர் பின் ஹிஷாம், உத்பா பின் ரபிஆ, ஷைபா பின் ரபிஆ, வலீத் பின் உத்பா, உமையா பின் கலஃப், உக்பா பின் அபீ முஅய்த், அம்மாரா பின் வலீத் ஆகியோரைப் பிடிப்பாயாக” என்றார்கள்.

அறிவிப்பாளர் ஹஸ்ரத் அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! பத்ர் போர் நாளன்று இவர்கள்

அனைவரும் விழுந்து கிடப்பதை நான் கண்டேன். பிறகு அவர்கள் பத்ர் போர்க் களத்தின் குழிக்கு இழுத்துக் கொண்டு வரப்பட்டு வீசப்பட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அம்மக்களைப் பார்த்து, குழியில் வீசப்பட்ட (இ)வர்கள் சாபத்தின் கீழ் இருக்கிறார்கள் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அபூ தல்ஹா அன்சாரி (ரலி) அவர்களிடமிருந்து அறிவிக்கப்படுகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பத்ர் போர் நாளில் குரைஷிய தலைவர்களில் 24 நபர்களைக் குறித்து, அவர்(களின் உடல்)களை பத்ர் களத்தில் உள்ள கிணறுகளில் ஒன்றில் எறியுமாறு கட்டளையிடார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் பத்ர் களத்திலிருந்து திரும்பிச் செல்லும் போது அந்தப் கிணற்றின் விளிம்பில் நின்று கொண்டு இறந்து போன அந்த காஃபிர்களை அவர்களுடைய தந்தையர்களின் பெயர்களைக் கூறி அழைத்தார்கள். "அல்லாஹ் மற்றும் அல்லாஹ்வுடைய தூதருக்கு நீங்கள் கட்டுப்பட்டு இருந்தால் அது எவ்வளவு மகிழ்ச்சியான விஷயமாக இருந்திருக்கும்! ஏனென்றால் எங்களுடைய இறைவன் எங்களிடம் செய்த வாக்குறுதிகள் உண்மையாவதை நாங்கள் கண்டு விட்டோம்" என்று கூறினார்கள்.

சீரத் காத்தமுன் நபிய்யீன் எனும் நூலில் இச்சம்பவத்தை மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதுகிறார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திரும்பிச் செல்வதற்கு முன் குரைஷிய தலைவர்களை அடக்கம் செய்திருந்த அந்த குழிக்கு அருகில் சென்றார்கள். அவர்களின் ஒவ்வொரு நபருடைய பெயரையும் கூறி அழைத்தார்கள். குழியில் விழுந்து கிடப்பவர்களே! நீங்கள் எனக்கு எதிராக போர் செய்தீர்கள்; மற்றவர்கள் எனக்கு உதவி செய்தார்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) கூறினார்கள். அன்னார் கூறிய இச்சொற்களைப் பார்க்கும்போது இந்தப் போர்களின் துவக்கம் காஃபிர்கள் சார்பாக செய்யப்பட்டது என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உறுதியாக நம்பினார்கள் என்பது இதிலிருந்து நிச்சயம் நிரூபணம் ஆகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நிர்பந்தத்திற்கு உள்ளாகி தம்மைப் பாதுகாப்பதற்காகவே வாளேந்தினார்கள்.

**வாழ்க்கை வரலாறு நூல்களில் பத்ர் போர் பற்றிய குறிப்பில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சில அற்புதங்கள் பற்றிய குறிப்பும் காணப்படுகிறது.** உ(க்)காஷா பின் மிஹ்ஸன் (ரலி) அவர்கள் பத்ர் போர் நாளன்று தம்முடைய வாளைக் கொண்டு போரிட்டுக் கொண்டிருந்தார்கள். அப்போது அந்த வாள் உடைந்து விட்டது. அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சமூகத்தில் ஆஜரானார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவர்களுக்கு ஒரு கம்பைக் கொடுத்து, உ(க்)காஷாவே! நீங்கள் இதைக் கொண்டு காஃபிர்களுடன் போரிடுங்கள் என்றார்கள். உக்காஷா அவர்கள் அதை சுழற்றிய போது அந்த கம்பு வாளாக மாறிப்போனது.

**காஃபிர்கள் தோல்வியுற்ற செய்தி மக்காவில் எவ்வாறு சென்றடைந்தது என்பதைப் பற்றிய குறிப்பு இவ்வாறு காணப்படுகிறது.** முஷ்ரிக்கள் பத்ர் போர்க்களத்தை விட்டு ஓடும் போது பயந்து போய் மக்காவை நோக்கி ஓடினர். வெட்கி தலைகுனிந்தவாறு தாம் எவ்வாறு மக்காவில் நுழையப் போகிறோம் என்று அவர்களுக்குப் புரியாமல் இருந்தது. குறைஷிய தலைவர்கள் கொல்லப்பட்ட செய்தியை மக்காவாசிகளுக்கு நிராகரிப்பாளர்கள் கூறியபோது அதை அவர்களால் நம்ப முடியவில்லை. கொல்லப்பட்டவர்களுக்காக துக்கம் கொண்டாடுவதை விட்டும், ஒப்பாரி செய்வதை விட்டும் அவர்கள் மக்களைத் தடுத்து விட்டார்கள்.

**இன்னொரு புறம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வெற்றியின் நற்செய்தியை மதீனாவாசிகளுக்குக் கூறுவதற்காக ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ரவாஹா (ரலி) அவர்களை மதீனாவின் உயர்வான பகுதியை நோக்கியும் ஹஸ்ரத் ஸைத் பின் ஹாரிஸா (ரலி) அவர்களை மதீனாவின் தாழ்வான பகுதியை நோக்கியும் அனுப்பி வைத்தார்கள்.**

ஹஸ்ரத் உஸாமா பின் ஸைத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: எங்களுக்கு வெற்றியின் நற்செய்தி எப்போது கிடைத்தது என்றால், நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் புதல்வியும், ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃப்வான் (ரலி) அவர்களின் மனைவியுமான ஹஸ்ரத் ருகைய்யா (ரலி) அவர்களுடைய கபரில் மண்ணை சமமாக்கி முடித்த போது கிடைத்தது.

அதாவது அவர்கள் வஃபாத் ஆகி இருந்தார்கள்.

ஹஸ்ரத் ஸைத் பின் ஹாரிஸா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒட்டகத்தின் மேல் அமர்ந்து மதீனாவுக்குள் நுழைந்தார்கள். இதைக் கண்ட யூதர்களும் முனாஃபிக்களும், பாருங்கள்! முஸ்லிம்கள் போரில் தோல்வியுற்று விட்டார்கள்; நவூதுபில்லாஹ் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களும் போரில் கொல்லப்பட்டு விட்டார்கள். ஆகவேதான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் ஒட்டகத்தில் ஸைத் வருகிறார் என்று கூற ஆரம்பித்து விட்டார்கள்.

ஹஸ்ரத் ஸைத் பின் ஹாரிஸா (ரலி) அவர்கள் வெற்றியின் நற்செய்தி கூறியவாறு குறைஷிய தலைவர்களின் பெயர்களை எடுத்துரைத்தவாறு இன்னின்ன தலைவர்களும் கொல்லப்பட்டு விட்டார்கள் என்று கூறியபோது, இது எவ்வாறு சாத்தியம் என்று முனாஃபிக்கள் கேட்டனர். முஸ்லிம்களுடைய தோல்வி மற்றும் முஹம்மது (ஸல்) அவர்களின் மரணத்தின் காரணமாக ஸைத் தம் சுயநினைவை இழந்து விட்டார்; ஆகவே இவ்வாறு பேசுகிறார் என்று கூறினர்.

வெற்றியின் மகிழ்ச்சியில் மதீனாவாசிகள் பெருமானார் (ஸல்) அவர்களை வரவேற்கும் விதமாக மதீனாவுக்கு வெளியே சென்று நின்றார்கள். அந்த முஸ்லிம்களின் இம்மகிழ்ச்சி காணத்தக்கதாக இருந்தது.

**இந்தப் போரில் முஸ்லிம்களுக்கு 150 ஒட்டகங்களும் 10 குதிரைகளும் போர்ச் செல்வங்களாக கிடைத்தன. அத்துடன் எல்லாவகை போர் தளவாடங்களும், துணிகளும், எண்ணற்ற தோல்களும், சாயம் பூசப்பட்ட**

**தோல்கள் மற்றும் கம்பளிகள் போன்றவையும் போர்ச் செல்வங்களாக கிடைத்தன.** ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஸஹாபிகளுக்கு நிகராக தமது பங்கையும் பிரித்திருந்தார்கள். அந்த போரில் சஹாபிகள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்காக ஒரு வாளை எடுத்து வைத்திருந்தார்கள். ஒட்டகங்களுள் அபூஜஹ்ல் -க்கு சொந்தமான ஓர் ஒட்டகமும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய பங்கில் வந்தது.

வரலாற்று நூல்களில் அந்த வாள் மற்றும் ஒட்டகத்திற்கு பெரும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. அந்த வாளின் பெயர் ஸுல்ஃபிகார் என்பதாக இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பிற்காலத்தில் நடந்த போர்களிலும் அந்த வாளைத் தம்முடன் வைத்திருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு அந்த வாள் அப்பாஸிய கலீஃபாக்கள் வசம் இருந்தது.

அவ்வாறே, ஹுதைபியா சமாதான உடன்படிக்கை வரை அந்த ஒட்டகம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹுதைபியா சமாதான உடன்படிக்கையின்போது அந்த ஒட்டகத்தை குர்பானி கொடுப்பதற்காகத் தம்முடன் கொண்டு சென்றிருந்தார்கள்.

போர் செல்வங்களை பிரிக்கும்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பத்ர் போரில் ஷஹீதானவர்களின் வாரிசுகளுக்கு அந்த ஷஹீதுகளின் பங்கைக் கொடுத்தார்கள். அதேபோன்று மதீனாவில் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டிருந்தவர்களுக்கும், பல்வேறு பணிகளுக்காக நியமிக்கப்பட்டிருந்த சஹாபிகளுக்கும் பங்கு கொடுக்கப்பட்டது. அவர்கள் அந்த பணிகளின் காரணமாக பத்ர் போரில் பங்கெடுக்க முடியவில்லை.

**பத்ர் போர் கைதிகளிடம் இருந்து ஃபித்யா வாங்கி அவர்கள் விடுவிக்கப்பட்டார்கள்.** ஃபித்யா தொகை ஓராயிரம் திர்ஹம் முதல் 4000 திர்ஹம் வரையிலும் இருந்தது. ஆயினும், எவரெல்லாம் ஃபித்யா தொகை கொடுக்க இயலவில்லையோ அவர்கள் மதீனாவில் உள்ள குழந்தைகளுக்கு எழுதப்படிக்க கற்றுக் கொடுத்து விட்டால் அதன் அடிப்படையில் அவர்கள் விடுவிக்கப்படுவார்கள் என்று நிபந்தனை வகுக்கப்பட்டது. அதேபோன்று குறைவான ஃபித்யா தொகை வாங்கியோ அல்லது ஃபித்யா வாங்காமலோ கூட சில கைதிகள் விடுவிக்கப்பட்டார்கள்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் இதைக் குறித்து எழுதுகிறார்கள்:

‘‘ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனா சென்றடைந்த பிறகு அந்தக் கைதிகளை என்ன செய்வது என்று ஆலோசனை செய்தார்கள். பொதுவாக அரேபியாவில் கைதிகளைக் கொன்று விடுவார்கள் அல்லது நிரந்தரமாக அடிமைகளாக ஆக்கும் வழக்கம் இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்விஷத்தை மிகவும் வெறுத்தார்கள். மேலும் அத்துடன், அப்போது வரை அதைக் குறித்து எவ்வித இறை கட்டளையும் இறங்காமல் இருந்தது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்:

என்னுடைய கருத்து என்னவென்றால், ஃபித்யா வாங்கிக் கொண்டு அவர்களை விட்டு விட வேண்டும். ஏனென்றால் இறுதியில் இவர்கள் நம்முடைய சகோதரர்களே ஆவார்கள். நாளை இவர்களிலிருந்தே எவரேனும் இஸ்லாத்திற்காக அர்ப்பணமாகக் கூடியவராக உருவாகி விட்டாலும் அதில் நமக்கு எவ்வித வியப்பும் ஏற்படாது!

ஆனால், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அந்தக் கருத்தை எதிர்த்தார்கள். மார்க்க விஷயத்தில் எவ்வித உறவுகளையும் கருத்தில் கொள்ளக்கூடாது. இவர்கள் தம் செயல்களினால் கொல்லப்படுவதற்குத் தகுதி பெற்று விட்டார்கள். ஆகவே என்னுடைய கருத்து, இவர்கள் அனைவரையும் கொன்றுவிட வேண்டும். இன்னும் கூறுவதாயின், முஸ்லிம்கள் தம் கைகளினாலேயே தத்தமது உறவினர்களைக் கொல்ல வேண்டும் என்று கட்டளை இடப்பட வேண்டும் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தம் இயல்பில் காணப்பட்ட கருணையினால் ஈர்க்கப்பட்டு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கருத்தை விரும்பினார்கள். கொல்ல வேண்டும் என்ற கருத்துக்கு எதிராகத் தீர்மானம் எடுத்தார்கள். எந்த முஷ்ரிக்கள் தம் ஃபித்யாவை செலுத்தி விடுகிறார்களோ அவர்களை விட்டு விடுங்கள் என்று கட்டளையிட்டார்கள். ஆகவே பிற்காலத்தில் இந்தத் தீர்ப்புக்கு ஏற்பவே இறை கட்டளையும் இறங்கியது. ஆகவே ஒவ்வொரு நபருக்கும் ஏற்றார் போல், ஓராயிரம் திர்ஹம் முதல் நான்காயிரம் திர்ஹம் வரை ஃபித்யா நிர்ணயிக்கப்பட்டது. இவ்வாறு கைதிகள் விடுவிக்கப்பட்டு கொண்டே சென்றார்கள்.''

*பத்ர் போர் தொடர்பான விபரங்கள் இனிவரும் காலத்தில் எடுத்துக் கூறப்படும் என்று கூறிய பிறகு ஹுஸூர் அவர்கள் இரு மர்ஹூம்களின் நற்குறிப்பை எடுத்துரைத்தவாறு ஜுமுஆவுக்கு பிறகு ஜனாஸா ஃகாயிப் தொழுகையை தொழ வைப்பதாக அறிவித்தார்கள்.*

முதலாவது நற்குறிப்பு, காட்கடைச் (kathgarh) சேர்ந்த ஜமாஅத்தின் முரப்பியும், பாகிஸ்தானுடைய நாயிப் நாஸிம் மால் வக்ஃபே ஜதீதுமான மதிப்பிற்குரிய ராணா அப்துல் ஹமீது கான் சாகிப் அவர்களைப் பற்றியதாகும். அடுத்த நற்குறிப்பு, மதிப்பிற்குரிய நுஸ்ரத் ஜஹான் அஹ்மத் சாஹிபா அவர்களுடையதாகும். இவர்கள் அமெரிக்காவில் ஜமாஅத்தின் முரப்பியாக இருக்கின்ற மதிப்பிற்குரிய முபஷ்ஷிர் அஹ்மத் சாஹிப் அவர்களின் மனைவி ஆவார்கள்.

*ஹுஸூர் அவர்கள் இந்த இரு மர்ஹூம்களின் பாவமன்னிப்பு மற்றும் உயர் அந்தஸ்து ஆகியவற்றுக்காக துஆ செய்தார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)